ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

ஆர்யதர்மம்.

नमे पार्थास्ति कर्तव्यं त्रिषुलोकेषु किञ्चन ।
नानवाप्तमवाप्तव्यं वर्त एवच कर्मणि ॥ गीता ।

நமே பார்தாஸ்தி கர்தவ்யம் த்ரிஷுலோகேஷு கிஞ்சந ।
நாநவாப்தமவாப்தவ்யம் வர்த ஏவச கர்மணி ॥ கீதா ।

ஹேபார்த்த! ஹே அர்ஜுநா! ஸர்வலோகேசுவரனான எனக்கு மூன்று லோகங்களிலும செய்யவேண்டிய கார்யம் ஒன்றுமில்லை. என்னால் அடையப்படாமல் அடையவேண்டுமென்று விரும்பக் கூடியவஸ்து ஓரிடத்திலும் ஒன்றுமில்லை. ஆனாலும் நான் கர்மா வைத்தான் அனுஷ்டித்துக்கொண்டிருக்கிறேன் என்று பகவான் அர்ஜுனனிடம் கூறியிருக்கிறார்.

அர்ஜுனன் யுத்தபூமியையடைந்து அங்கிருப்பவர்களைப் பார்த்துத் தனக்கு அதிகமான பாபமுண்டாகுமென்றும், தான் ஸ்வதர்மமான யுத்தகர்மாவை அனுஷ்டிக்கமாட்டேன். பிக்ஷை எடுத்தாகிலும் ஜீவிக்கிறேன். இந்தப் பாபகர்மாவைச் செய்யமாட்டேனென்று வைராக்கியம் பேசுங்கால் ஸ்ரீ பகவான் அறிவிக்கின்றார். ஹே பார்த்த! எப்படி இருந்தாலும் ஸ்வதர்மத்தை அவசியம் அனுஷ்டித்தே தீரவேண்டும். பலத்தில் விருப்பமில்லையென்று விடமுடியாது. எனக்கு அடையவேண்டிய பலம் யாதொன்றுமில்லை. எல்லா பலத்தையும் அடைந்துவிட்டேன். ஆனாலும் கர்மாவை விடாமல் அனுஷ்டித்து வருகிறேன், ஆகையால் நீயும் பலத்தில் விருப்பமிருந்தாலும் இல்லாவிட்டாலும ஸ்வதர்மத்தை விடாமல் அவசியம் அனுஷ்டித்தே தீரவேண்டும் என்று வற்புறுத்துகிறார். இதினால் சிலர் குட்டிவேதாந்தம் பேசிக்கொண்டு தமக்கு ஸ்வதர்மமான கர்மா வேண்டியதில்லை என்றும் அது மந்தாதிகாரிகளுக்கென்றும் தாம் அதிவர்ணாச்ரமி என்றும் பிறரை ஏமாற்றிக்கொண்டு தோன்றியபடி தகாத தீயச்செயல்களைச் செய்வது மிகவும் தப்பென்றும் அவரவர்களுக்குற்ற தர்மானுஷ்டானங்களை அவசியம் ஜீவனுள்ளவரையில் பலத்தில் விருப்பமில்லாவிட்டாலும் அவசியம் அனுஷ்டிக்கவேண்டுமென்றும் ஏற்படுகின்றது.

உபபத்திராதிபர்.

ஆர்யதர்மம்.
பிரபவ-ஹூ புரட்டாசி-மீ உ௦வ

கீதையும் ராட்டினமும்.

புரட்டாசி-மீ 1வ சனிக்கிழமை வெளிவந்த மித்திரனில்:- மஹாத்மாவின் சுற்றுப்பிரயாணம் பகவத்கீதையின் பெருமை என்றும் தலையங்கமிட்டு மன்னார்குடி நாஷனல் ஹைஸ்கூலில் காந்தியால் செய்யப்பட்ட உபந்யாஸம் என்று பிரசுரித்திருப்பதைக் கவனித்தோம். அதில் கீதையின் 3-வது அத்தியாயத்தில் ராட்டினத்தினுடைய மஹிமையைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறதென்றும், இளவயதில் விதவையாகப் போவதற்கும் தீண்டாமைக்கும் பகவத்கீதையில் இடமேகிடையாதென்றும் கூறப்பட்டிருக்கிறது.

காந்தி அவர்கள் ஏழைஜனங்களின் ஸௌக்கியத்தை உத்தேசித்து கதர் அபிவிருத்தி செய்யவேண்டி நம் தேசத்திலுள்ள பலரும் ராட்டினத்தில் ஒரு தினத்திற்கு ஒருமணியாவது நூல் நூற்கவேண்டுமென்று ஆங்காங்கு பிரசாரம் செய்துவருகிறாரென்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே. காந்தியவர்களின் அபிப்பிராயப்படி நம் தேசத்திலுள்ள ஏழைகளின் க்ஷேமத்தை உத்தேசித்து இது மிகவும் சிறந்த காரியம் என்று எல்லோராலும் அங்கீகரிக்கக்கூடியதே. ராட்டினத்தினுடைய மஹிமையைப் பற்றி இவர் தம் ஸொந்த அபிப்ராயமாக எவ்வளவு கூறினாலும் அதில் ஒருவரும் அதிருப்தியடைய நியாயமில்லை. ராட்டினத்தில் தமக்கு இருக்கும் அதிக அபிமானத்தால் இவ்விதம் கூறுவது உசிதம், இது அநுசிதம் என்று கொஞ்சம்கூடநினையாமல் ராட்டினத்தினுடைய மஹிமையைப்பற்றி கீதையின் 3வது அத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கிறதென்று எப்படிக்கூறினாரோ தெரியவில்லை. கீதாசாஸ்திரம் என்பது எதற்காக ஏற்பட்டதென்று நன்கு கவனித்தோமானால் அடிக்கடி பிறப்பிறப்பைப்பெற்று அதிக கஷ்டங்களை அநுபவிப்பதற்கு முக்ய காரணமான ஸம்ஸாரம் எனப்பெயர்

வாய்ந்த இப் பெரும் பிணியை அடியோடு அகற்றி என்றும் அழி வில்லாததும் நித்யஸுகஸ்வரூபமாயும் விளங்கும் மோக்ஷமென்னும் சிறந்த பரமபுருஷார்த்தத்தைப் பெறவேண்டி, அதற்குற்ற சாத னங்களை அர்ஜுனனை நிமித்தமாகக்கொண்டு ஸ்ரீபகவான் உபதே சித்திருக்கிறார். இக்கருத்தையே கீதாசாஸ்திரத்தின் துவக்கத்தில் ஈசுவர அவதாரம் என்று போற்றக்கூடிய மகிமைவாய்ந்த பல ஆசாரியர்களும் நன்கு வெளியிட்டிருக்கிறார்கள். இதற்கிணங்கவே மூன்றாவது அத்தியாயத்தில் மோக்ஷஸாதகமான கர்மயோகத்தை ஸ்ரீபகவான் நிரூபித்திருக்கிறார்' அந்த அத்தியாயத்தில் கர்மா வைச் செய்யவேண்டும் என்று சொல்லியிருப்பதைக்கொண்டு, "கர்மா" வென்றால் தொழில் என்று பொருள்கொண்டு உலகில் எவரெவர்கள் எங்கெந்தத் தொழிலைச் செய்தாலும் அவையாவும் கர்மயோகமென்று நினைத்து கீதையில் சொல்லப்பட்டிருக்கும் கர்மயோகத்தைத்தான் நாம் செய்கிறோமென்று நினைப்பதும் சரியல்ல. நம்மால் செய்யப்படும் ஸகல கர்மாக்களும் கர்மயோக மாயிருப்பின் அதைப்பற்றி கீதையில் கூறவேண்டியது அனுவச்ய மாகும். சாஸ்திரமென்பது நம்மால் அறியப்படாத உத்தமமான மோக்ஷத்தைப் பெறுவதற்குச் சாதகமான மார்க்கங்களை அறிவிக் கவேண்டி முன்வந்ததேயல்லாமல், உண்பது, நடப்பது, நூற்பது முதலிய கர்மாக்களைப்பற்றிச் சொல்ல வரவில்லை. கர்மாவென்றால் எது என்று சங்கிக்கும் அர்ஜுனனைப் பார்த்து ஸ்ரீ பகவான்:—

किंकर्म किमकर्मेति कवयोऽप्यत्र मोहिताः ।
तत्ते कर्म प्रवक्ष्यामि ॥

கிங்கர்ம கிமகர்மேதி கவயோऽப்யத்ர மோஹிதா: ।
தத்தே கர்ம ப்ரவக்ஷ்யாமி ॥

எது கர்மா, எது கர்மாயில்லை என்று பகுத்தறிவதில் பண்டிதர்க ளும் மோகத்தையடைகிறார்கள். உண்மையான கர்மாவை உனக்கு நான் சொல்லுகிறேன் என்றுகூறி பிறகு மூன்றாவது அத்தியாயத்திலேயே

कर्म ब्रह्मोद्भवं विद्धि ॥ கர்ம ப்ரஹ்மோத்பவம் வித்தி ॥

கர்மாவானது வேதங்களால் செய்யும்படி விதிக்கப்பட்டதேயா கும் என்று பகவான் கூறியிருக்கிறார். இதற்கிணங்கவே 3-வது அத்தியாயம் எட்டாவது சுலோகத்தில்

नियतं कुरु कर्म त्वं । நியதம் குரு கர்ம த்வம் ।

'नियतं कर्म' நியதம் கர்ம என்கிற பதத்திற்கு சாஸ்திரங்களில் முக்யமாய் அனுஷ்டிக்கவேண்டுமென்று விதிக்கப்பட்ட கர்மா என்று ஸ்ரீ சங்கரபகவத்பாதாசாரியாள் பாஷ்யத்தில் விரித்துள்ளார். இவ்விதமே மூன்றுவது அத்தியாயத்தில் கூறப்பட்ட கர்மபதத்திற்கு ஆங்காங்கு சாஸ்திரத்தில் விதிக்கப்பட்ட நித்ய கர்மாக்களென்று ஸ்பஷ்டமாய் வெளியிடப்பட்டிருக்கின்றன. இவ்விதமிருக்க கீதையில் ராட்டினத்தின் மஹிமையைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றது என்று எவ்விதம் கூறினரென்பது தெரியவில்லை. கீதைக்கும் ராட்டினத்திற்கும் என்ன சம்பந்தம்? எவ்வளவு ஜன்மா ராட்டினத்தில் வேலை செய்தாலும் அதினல் இவ்வுலக வாழ்கைக்கு ஏதாகிலும் பொருள் கிடைக்குமேயன்றி பரலோகத்திற்கு அற்பமேனும் பயன்படுமா? அவருக்கு ராட்டினத்தில் அபிமானம் இருக்கிறதென்று சாஸ்திரத்தில் இல்லாததை இருக்கிறதென்று நிரூபிக்க முன்வந்ததுபோல் அவரவர்களும் தங்கள் தங்களுக்கு இஷ்டமான பயிர்த்தொழில், வியாபாரம், முதலியவைகளின் மகிமைகளைப்பற்றி கீதையில் சொல்லியிருக்கிறது என்று ஏன் சொல்லக்கூடாது? இம்மாதிரி விஷயங்களை போதிப்பதற்காகவா கீதாசாஸ்திரம் ஏற்பட்டிருக்கிறது? அப்படி போதிப்பதாய் இருந்தால் அதற்கு சாஸ்திரம் என்ற பெயரே பொருத்தமாகாது. ஆகையால் கீதாசாஸ்திரத்தில் ராட்டினத்தின் மகிமையைப்பற்றிக் கூறியிருக்கிறது என்பது தவறேயாகும்.

2. இளவயதில் விதவையாய்ப் போவதற்கும், தீண்டாமைக்கும் பகவத்கீதையில் இடமே கிடையாதென்றும் காந்தி உபதேசித்திருக்கிறார். இளவயதில் விதவையாகவேண்டுமென்று கீதாசாஸ்திரத்திலோ, மற்றுமுள்ள சாஸ்திரங்களிலோ கூறப்பட்டிருக்கிறதென்று ஒருவரும் கருதவில்லை. பிறர் சொல்லாத அர்த்தத்தை இவராக எடுத்துக்கொண்டு கீதையில் சொல்லப்படவில்லை என்பது அறிஞர்களுக்கழகல்ல. தீண்டாமையைப் பற்றியும் கீதையில் இல்லை என்றும், ஆகையால் நாம் அங்கீகரிக்கக்கூடாதென்றும் சொல்வதும் சரியல்ல; கீதாசாஸ்திரம் வர்ணுசிரம தர்மங்களை உபதேசிக்கவேண்டி முன்வந்ததல்ல. மோக்ஷஸாதனமான முக்யமான வழிகளை அறிவிக்கவேண்டி வந்திருக்கிறது, வர்ணுசிரம தர்மங்களை போதிக்கும் சுருதி, ஸ்மிருதி, புராணம்

முதலிய பல பிரமாணங்கள் இருந்தும் அவைகள் நமது காந்தி அவர்களின் கண்களுக்குப் புலப்படாமல் கீதைமாத்திரம் எப்படி புலப்பட்டதோ தெரியவில்லை. கீதையில் கூறுமல் சுருதி, ஸ்மிருதி முதலிய புராணங்களில் ஓர் விஷயத்தைக் கூறியிருந்தால் அது பிரமாணம் இல்லையென்றும் கீதையில் இருந்தால்தான் பிரமாணம் என்றும் எப்படிக் கூறமுடியும். காந்தியின் அபிப்ராயப்படி கீதை ஒன்றுதான் ப்ரமாணம் என்று அங்கீகரித்தாலும் இவரால் கூறப்படும் விதவாவிவாகம் பதினாறு வயதிற்குமேல்தான் ஸ்திரீகளுக்கு விவாகம் செய்யவேண்டும். தீண்டாமை கூடாது என்கிற இவைகளுக்கு கீதாசாஸ்திரத்தில எந்த அத்தியாயத்தில் பிரமாணவசனங்கள் இருக்கின்றன? பிறர்மேல் குறைகூற முன்வரும் ஒருவர் தம்மால் கூறப்பட்ட விஷயத்தில் அக்குறையில்லாமல் செய்துகொண்டு வந்தாலன்றோ உசிதமாயிருக்கும்? அவ்விதமின்றி தம்மால் கூறப்படும் விஷயங்களுக்கு தமது வாக்கையே முக்யப்பிரமாணமாகக்கொண்டு சாஸ்திர ப்ரமாணங்களை ஆதாரமாகக்கொண்டு பிறர் கூறும் விஷயத்தை சாஸ்திரங்களில் இல்லை என்று கூற முன்வருவது எவ்வளவு ஸாஹஸமான காரியம்! இவரால் முக்ய ப்ரமாணமாய்க் கருதப்படும் கீதாசாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கும் வசனங்களையாவது இவர் சற்று உற்றுநோக்கியிருந்தால் இவ்விதம் கூற நியாயமில்லை. கீதை 16-வது அத்யாயத்தில்

तस्माच्छास्त्रं प्रमाणं ते कार्याकार्य व्यवस्थितौ ।
ज्ञात्वा शास्त्र विधानोक्तं कर्म कर्तुमिहार्हसि ॥

தஸ்மாச்சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யாகார்ய வ்யவஸ்திதௌ ।
ஜ்ஞாத்வா சாஸ்த்ர விதாநோக்தம் கர்ம கர்துமிஹார்ஹஸி ॥

ஹே அர்ஜுனு! சாஸ்திரவிதியை விட்டுத் தமக்குத் தோன்றியவாறு ஒரு கர்மாவைச் செய்தால் இம்மையிலோ மறுமையிலோ ஒருவிதமான பயனும் ஏற்படாததாகையால் இதுநல்லகாரியம் இதுகெட்டகாரியம் என்று தீர்மானிப்பதில் நீ சாஸ்திரங்களையே பிரமாணமாகக் கொள்ளவேண்டும். சாஸ்திரங்களில் எந்தக்கர்மாவை அநுஷ்டிக்கவேண்டுமென்று கூறப்பட்டிருக்கின்றதோ அக்கர்மாவையே அனுஷ்டிப்பதற்கு நீ அருகனுகிறுய் என்றும்,

यश्शास्त्रविधिमुत्सृज्य वर्तते कामकारतः ।
न ससिद्धिमवाप्नोति न सुखं न परां गतिम् ॥

𑌯𑌶𑍍𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌧𑌿𑌮𑍁𑌤𑍍𑌸𑍃𑌜𑍍𑌯 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 𑌕𑌾𑌮𑌕𑌾𑌰𑌤𑌃 ।
𑌨 𑌸 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑌵𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌨 𑌸𑍁𑌖𑌂 𑌨 𑌪𑌰𑌾𑌂 𑌗𑌤𑌿𑌮𑍍 ।

எவன் வேதங்களிலோ அதைப்பின்பற்றும் ஸ்மிருதிமுதலியவைகளிலோ தனக்குச் செய்யும்படி விதிக்கப்பட்ட கர்மாவை விட்டுவிட்டு தன்னிஷ்டம்போல் தோன்றியபடி செய்கிருனே அவன் அக்கர்மாவின் பயனை அடையமாட்டான். அவனுக்கு இவ்வுலகிலும் சுகமில்லை, பரலோக ப்ராப்தியும் கிடையாது என்றும்,

अधर्म धर्ममिति या मन्यते तमसावृता ।
सर्वार्थान्विपरीतांश्च बुद्धिस्सा पार्थ तामसी ॥
𑌅𑌧𑌰𑍍𑌮𑌂 𑌧𑌰𑍍𑌮𑌮𑌿𑌤𑌿 𑌯𑌾 𑌮𑌨𑍍𑌯𑌤𑍇 𑌤𑌮𑌸𑌾𑌵𑍃𑌤𑌾 ।
𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑍍𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌾𑌂𑌶𑍍𑌚 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌸𑍍𑌸𑌾 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌤𑌾𑌮𑌸𑍀 ।

ஹே அர்ஜுனு! எந்த புத்தியானது அக்ஞானத்தால் சூழப்பட்டதாய்க்கொண்டு அதர்மத்தைத் தர்மமென்றும் மற்றும் சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கும் ஸகல விஷயங்களையும் மாறுதலாகவும் கருதுகின்றதோ, அதுதான் தாமஸபுத்தியாகும் என்று ஸ்ரீ பகவான் ஸ்பஷ்டமாய்க் கூறியிருக்கிறுர். இவைகளால் சாஸ்திரங்களைக்கொண்டு தீர்மானித்து நடத்தவேண்டிய காரியங்களை அவைகளைவிட்டு எனக்கு இவ்விதம் தோன்றுகிறதென்றும் கிதையில் இருந்தால்தான் நான் ஒப்புக்கொள்வேனென்றும், கூறுவது மிகவும் தவறென்றேற்படுகிறபடியால் காந்தி சொல்லியிருப்பது ஸரியல்லவென்று ஸ்பஷ்டமாய் வெளியாகின்றது. சுபம்.

உபபத்திராதிபர்

ஆன்ஹிகக்ரமம்.

(441-வது பக்கத்தொடர்ச்சி)

ஆஹாரவிஷயம் மிக முக்யமானதாலும் எல்லோரும் இஃதொன்றையே தவராமல் அனுஷ்டிப்பதாலும் ஆஹார நியமத்தால் எப்படி சரீரத்திற்கு நோய்வராமல் காக்கலாமோ அதேபோல் அந்தக்கரணத்திற்கும் தத்வாரா ஜீவனுக்கும் எவ்விததீங்கும்வாராமல் காக்கக்கூடுமெனக்கருதி அதைப்பற்றி அதிகம் வரையவேண்டியிருக்கிறது. பசித்தபிறகு மிதமாயும் ஹிதமாயும் புஜிப்பவன்

ரோகத்திற்கு ஆளாகான். மிதமென்பது சாஸ்திரத்தினல் கூறப் பட்டுளது. அதாவது கிருஹஸ்தன் முப்பத்திரண்டு கபளம் புஜிக்கவேண்டும். குடலில் இரண்டுபங்கு அன்னமும் ஒரு பங்கு ஜலமும் மற்றோர் பங்கு வாயு ஸஞ்சாரத்திற்காகக்காலியாகவிருக்க வேண்டுமெனவும் விதியுள்ளது. பாகம்செய்யும் பாத்ரம் சிஷ்டா சாரத்தில் சில ஆண்டுகளுக்கு முன்வரை மண்பானையாகவே இருந் தது. நாகரீகமென்றெண்ணிப் பித்தளையையும் வெண்கலத்தை யும் உபயோகிக்கின்றனர். குடல் ஸம்பந்தமான நோய்க்கு இன் ஞூதந பாத்ரங்களே பெரிதும் காரணமாகும். குடிக்கும் பாத் ரம் செம்பாயிருத்தல் மிக மிக அவசியம். உண்ணும்போது வலது புறத்திலேயே தீர்த்த பாத்திரத்தை வைத்துக்கொள்ளவேண்டும். தீர்த்தம் உட்கொள்ளும்போதெல்லாம் இடது கையை வலது புற மாகக் கொண்டுபோவதால் குடலில் செல்லுமன்னம் இடையில் தங்காது உள்ளே செல்லும். கோணியில் தான்யத்தைப்போடும் போது இடையே அடிக்கடி அதைத்தூக்குவதனுல் உண்டாகும் பயன்வலதுபக்கத்திலிருந்ததீர்த்தத்தைஎடுப்பதனுலுண்டாகிறது

ஹிதமான உணவென்றுல் ஸாத்விகமானதெனப் பொருள். மனதிற்கு மதத்தைக்கொடுக்காமல் புத்தியை வளர்க்கக்கூடியவை பசும்நெய் தூதுவளங்கீரை பயத்தம்பருப்பு முதலியவைகளா கும். காமக்ரோதங்களை வளர்க்கக்கூடியவை, முருங்கக்காய், கத்தரிக்காய், புளி, உப்பு, மிதமான காரம் முதலியவை ரஜோ குணமாம். புத்திக்கு மயக்கத்தைக் கொடுப்பவை பழையது, வெங்காயம் முதலியன தாமஸமாகும். ஆதலால் முன்னேர்பின்பற் றிவந்தஆஹாரங்களையே நாமநுஷ்டித்து ஸாத்விக குணத்தையே விருத்திசெய்யவேண்டும். அன்னமே மனமாகிறதெனவேதம் கூறு கிறது. நாமுண்ணும் அன்னம் ஸ்தூலம் மத்யமம் ஸூக்ஷ்மம் என முப்பிரிவாகிறது. உள்ளே சென்று பாகமான பிறகு ஸ்தூ லாம்சமே மலமாகக் கழிகிறது. மத்யமாம்சம் மாம்ஸமாகப் பரி ணமிக்கிறது. ஸூக்ஷ்மாம்சம் மனதாகிறது.

ஆதலால் தான் ஆகாரம் சுத்தமாயிருந்தால் மனம் சுத்த மாயிருக்கும் என ச்ருதி சொல்லுகிறது. அத்தகைய நியம மில்லாது கண்டவிடத்தில் கண்டதைப் புஜிப்பதால் தான் சித்த விருத்தி மாறி பலசாஸ்திரம் கற்றிருந்தும் கற்றதற்குநேர்விரோத

மாகச் சிலர் பேசுவதும் நடப்பதுமாக, தற்காலத்தில் கண்ணில் படுகின்றனர். ஸாத்விக ராஜஸ தாமஸ ஆஹாரங்களைப் புஜித்த வன்று முறையே மனம் நிர்மலமாயிருத்தலும் காமக்ரோதங்களைத் தூண்டுவதும், மதத்தால் மயங்கி நிற்பதும் அநுபவத்தால் எளிதில் காணலாம்.

ஸ்வதர்மத்தைவிட்டவன், அநேகருக்கு உபாத்யாயம்செய்து வைப்பவன், தனமிருந்தும் தர்மம் செய்யாதவன், தாய் தந்தை குருக்களை ஆதரிக்காமல் விட்டவன், வட்டிக்குவிட்டு ஜீவிப்பவன் அக்னிபூஜை பஞ்சாயதந பூஜைகளை விட்டவன், திருடன், பாடகன், தனது ஸ்திரீ பரபுருஷனையடைந்ததைத் தெரிந்து அவளை வீட்டில் வைத்திருப்பவன், கோப்ராம்மண ஸ்திரீசிசுவதம் செய்தவன், புரோஹிதன், தோல் வியாபாரீ, வைதிககர்மாவை விட்ட ஷண்டன், டம்பத்திற்காக கர்மா செய்யும் மார்ஜாரன், ஸபையில் பக்ஷபாதமாகப் பேசியவன், ஸந்ததி இல்லாதன், வைத்யன், ஆபிசாரம் செய்பவன், கோபத்தால் ஸன்யாஸம் செய்து மறுபடி வீடுவந்தவன், சிக்ஷைபடைந்தவன் முதலியவர்கள் அன்னத்தைப் புஜிக்கலாகாது. அவர்செய்த பாபம் அன்னத்தின் மூலமாக உண்பவரிடம் வந்து சேருகிறது. ஆதலால் இத்தகையவர் அன்னத்தை நிஷேதித்தார். இதில் ஏதேனுமொரு குற்றத்தைச் செய்யாதவர் மிகக்குறைந்தவர். ஆதலால் தான் பரான்னமே கூடாதெனப் பொதுவாகத் தடுக்கப்பட்டிருக்கிறது. தானமாக அவரிடமிருந்து எதை வாங்கினாலும் வாங்கலாம். அன்னத்தை மாத்திரம் ஏற்காதே எனக்கருணையுடன் மஹரிஷிகள் கூறுகின்றனர். எல்லா பாபத்தையும் நீக்கிகொள்ளலாம். அன்னலேபத்தை நீக்குவதரிது என்கின்றனர். ஸ்வஜாதியிலேயே இங்ஙனம் பரான்னம் நிஷேதிக்கப்படின் மற்ற ஜாத்யன்னத்தைப்பற்றி சொல்லவும் வேண்டுமோ ? சூத்ரான்னம் ஸர்வதாகூடாதெனத் தடுக்கப்பட்டுள்ளது. அதைப புஜித்திறப்பவன் பனிரண்டு ஜன்மம் கழுகாகவும், பத்துஜன்மம் பன்னியாகவும, ஏழுஜன்மம் நாயாகவும்பிறப்பான். ஆனதுபற்றி கூடுமானவரை ஊர்பாபத்தை வாங்கிகொள்ளாமலிருகக தற்காலததிய நாகரீகப்படி எவருக்கேனும் ஏதேனும் பட்டமோ பதவியோ கிடைத்திடின் அச்சமயததில் நடக்கும அநாசார விருந்துக்குச் செல்லாமலிருத்தல் வேண்டும். நகரங்களில் தெரிந்தோ தெரியாமலோ, தாஸ்திரீ சேஷம், சூத்ர

சேஷம், பித்ருசேஷம் இவைகள் கவனிக்கப்படுவதில்லை. சிலர் நம் வீட்டு சேஷந்தானே என்பதுண்டு யார் வீட்டு நெருப்பாயிருந்தாலும் சுடும் அல்லவா ?

தானே ஆபோசனம் போட்டுக்கொள்ளல் கூடாது. மௌனமாகச்சாப்பிடுவது உசிதம். சாப்பிடும்போதோ அல்லது கைஅலம்பி ஆசமனம் செய்வதற்குமுன்னோ ஒருவர்மேல் ஒருவர்பட்டுக்கொள்ளக்கூடாது. சாப்பிடும்போது சூத்ரன், நாய், பிரஸவித்தவள் முதலியவர்களைக் கண்டால் அதோடு நிறுத்தி எழுந்து ஸ்நானம் செய்யவேண்டும். சூத்ரர் சண்டாளன்முதலியவர்கள் சப்தம்போடும்போது, புசிக்கலாகாது; கைஅலம்பி ஆசமனம்செய்வதற்குள், சூத்திரன் நாய் முதலியவர்களைப் பார்க்கலாகாது, பார்த்தால்அவர்களோடு புஜித்த பாவம் நேரும். கை அலம்ப வாசற்பக்கம் செல்வது நியாயம். த்வாரதேவதைகள் இவன் வீட்டில் இத்தனை பேர் புஜித்தார்களெனக்கணக்கெடுப்பார்களாம். ஏகாதசிகளில் புஜிக்கக் கூடாது. பௌர்ணமி அமாவாஸைகளில் இரவில்போஜனம்செய்யக்கூடாது சூர்யக்ரஹணத்திற்கு நாலுயாமம் முன்னும் சந்திரக்ரஹணத்திற்கு மூன்று யாமங்களுக்கு முன்னும் பால விருத்த ஆதுரர் தவிர மற்றவர்கள் புஜிக்கலாகாது. உத்தராபோசநஜலத்தில் குடித்தபிறகு கொஞ்சம்மீத்தி, ரௌரவே என்று துவக்கும்ச்லோகத்தைச் சொல்லி ரௌரவ நரகத்திலுள்ளவர்களுக்கு அந்தஜலத்தை விடவேண்டும். எச்ச இலையில் காக்கை, நாய், முதலியவைகளுக்காகக் கொஞ்சம் அன்னம் வைக்கவேண்டும். அதற்காக அன்னாதிகளை வீணாக எறியலாகாது. எதை எரிந்தாலும் நெய், பாயஸம், இவைகளை பாக்கியில்லாமல் புஜித்து விடவேண்டும். உளுந்து கடலை முதலிய மாவுகளால் கைகளை நன்றாகத் தேய்த்தலம்ப வேண்டும்' பனிரண்டு முறைக்குக் குறையாமல் வாய்க்கொப்பளித்து இடது புறத்தில் விடவேண்டும். பிறகு இரண்டு முறை ஆசமனம் செய்து சில மந்திரங்களால் கண் முதலிய இந்திரிய ஸ்தானங்களை ஜலத்தால் தொடவேண்டும். சாப்பிட்டவுடன் நூறு அடியாவது நடந்த பிறகு உட்காரவேண்டும். உடனே உட்கார்ந்தால் தொந்திவிழும். நின்றவன் ஓஜஸ்ஸையும், நடப்பவன் ஆயுளையும், ஓடுகிறவன் மரணத்தையுமடைவான் பகலில் உறங்கினால் ஆயுஸ்குறையும்.

தேவதைக்கு அர்ப்பணம்செய்த தாம்பூலத்தை தரிக்கலாம். மிதமாயும் விதிப்படியும் தரிக்கும் தாம்பூலம் பல நற்குணங்களைக் கொடுக்கும். அதே அடிக்கடி உபயோகப்படின் பல தீங்குகளை விளைவிக்கும். அதோடு புகையிலை என்ற அபதார்த்தம் பண்டிதர் முதல் பாமரர்வரை எல்லாரையும் ஆட்டிவருகிறது. நேராக வாயி லிட்டுச் சிலரும், தூளாக்கி மூக்கில் ஏற்றிச் சிலரும், சுருட்டி அக்னி கலந்து சிலரும் இதன் ரஸத்தை அநுபவிக்கின்றனர். இல்லாவிடில் அதிக துன்பத்தையளிக்கும் காபிக்குத் தம்பிபோலு மிது. இத்தீய வழக்கத்திற்கு இலக்காகாதவர் வெகு சிலரேயாவர். வைத்யமுறைப்படி ஏதோ கடுகளவு நற்குணமும், மலையளவு தீய குணமும், அப்புகையிலையினிடமிருக்கின்றதென்பர். விவேகிகள் இத்துராப்யாஸத்தை விட்டுவிட முயற்சித்தல், மிக அவசியம். அதிக தாம்பூல ஸேவையால் பல்லின் பலஹாநி, கண்ணோய், ஆயுஸ் புத்தி, ரேதஸ், சக்தி இவைகள் குறைவும் உண்டாகும். வெத்திலை நரம்பில் அலக்ஷ்மியிருப்பதால் அதை நீக்கவேண்டும்.

ஸாயம்ஸந்தியை அக்னிஹோத்ரியைத்தவிற ஏனையோர் வெளியிலுள்ள தடாகாதிகளில் செய்யவேண்டும். ஸாயம்வேளை யில், நல்ல காற்றும், நடையும் தேஹத்திற்கு ஆரோக்கியத்தை யளிப்பதன்றோ? ஸாயமௌபாஸனத்திற்கும், வைச்வதேவத்திற் கும் பிறகு புசித்துக் கொஞ்சநேரம் ஸத்காலக்ஷேபம்செய்து, அதிவிரைவில் படுத்துறங்கவேண்டும். திறந்தவெளியிலும் வடக் கிலும், மேற்கிலும் தலைவைத்துப்படுக்கலாகாது. பூச்சி புழுக் கள் உபாதியில்லாமலிருக்க, அபஸர்ப்ப என்ற சுலோகத்தையும், சில ஸ்துதிகளையுங்கூறி கால் ஈரமில்லாமல் படுக்கவேண்டும். தாம பத்ய சிற்றின்பத்தை அநுபவிக்க, சிற்சில விதி நிஷேதங்களும் உண்டு. பெண்கள் ருதுவாகி ஸ்நானம்செய்த ஐந்தாம் நாளிலி ருந்து பதினாறு நாட்களுக்குள் ஓர்முறை ஸந்ததியில்லாதவன் தடுக்கப்படாத நாளில் ஸங்கமம் அவசியம் செய்யவேண்டும். முதல்முறையானால் அச்சமயம், ஸத்ஸந்ததி பிறக்கக்கூடுமாத லால் யக்ஞோபவீதியாகவும் இருவர்களும் நக்னரில்லாமலும் இருத்தல் வேண்டும். உடனே ஸ்நானம்செய்வது உத்தமம். ஸௌகரியமில்லாவிடில், நன்றாக சுத்திசெய்துகொண்டு ஆசமனம் செய்து உறங்கவேண்டும். அஷ்டமி ஏகாதசி த்வாதசி பௌர் ணமி அமை இன்னாட்களில் செல்பவன் இந்திரியமற்றவனாய் விடு

வான். ஆதலால் அத்தினங்களிலும் ஜன்மநக்ஷத்திரம், கிருத்திகை அப்யங்கதினம், வபநதினம், பகல் இவைகளையும் விட்டுவிட வேண்டும். சாஸ்திரநிஷேதமாத்ரமில்லாது தேஹாரோக்கியமும் இதில் கவனிக்கப்படுவதால் இதன்படி நாம் நடப்பது அத்யாவச்யமானதன்றோ? இத்துடன் தர்மதேவதையின் அநுக்ரஹத்தால் ஒருவகையாக ஆன்ஹிகக்ரமம் முடிந்தது. பலநாளாக மந்தமாக வந்ததால் நேயர்களுக்கு ஏதாவது கஷ்டத்தைக் கொடுத்திருந்தால் அதை மன்னிக்கவும். குற்றங்குறைகளிருப்பது ஸஹஜம். வேண்டியதை எடுத்துக்கொண்டு, வேண்டாவற்றை, விலக்குவது ஸாதுக்கள் கடமை. பொருமையுடன் படித்துவந்த நேயர்களுக்கும், பிரசுரித்துவந்த பிரும்மஸ்ரீ பத்திராதிபரவர்களுக்கும் ஸர்வ வல்லமையுள்ள ஜகதீச்வரனுக்கும் பக்திபுரஸ்ஸரமான வந்தனமளிக்கிறேன். ஸ்ரீவத்ஸ. வெ. ஸோமதேவ சர்மா.

ஓர் கண்டனக் கூட்டம்.

நாளது வருஷம் ஆவணி-மீ 26உ பாநுவாரம் மாலை நாலு மணிக்கு அமரகலாவிலாஸினீ ஸபை முத்யால்பேட்டை பிராமண ஸபை, இவைகளினுதரவில், ஓர் பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. பிரும்மஸ்ரீ வெ. ஸோமதேவசர்மா அவர்கள் அக்ராஸநம் வஹித்து கூட்டத்தின் நோக்கத்தைக் குறித்து, விஸ்தாரமாகப் பேசினுர்.

தேசியவிஷயமாக அரும் பாடுபட்டுவரும் தியாகியான ஸ்ரீமான் காந்தி, ஓராண்டில் ஸ்வராஜ்யம் எனக்கூறி மாணவர்களைப் பள்ளியை விடும்படி சொல்லி பின்னற் தனது குற்றத்திற்கு வருந்தியதுபோல், மதவிஷயத்தில் பொருக்கமுடியாத, பல குற்றங்களைச் செய்துவருகிருர். பின்னற் ஓர் ஸமயம் இதற்காக வருந்தி உண்ணுவிரதம் செய்யும் காலம் வராமல் போகாது. தீண்டாமையோடு நிற்காமல், மாணவர்களைக்கூட்டி ஒவ்வொருவரும், விதவா விவாஹம் செய்துகொள்ளவேண்டும், என உபதேசிக்கத் துடங்கி விட்டார். சிராத்தம் செய்வது, வீண் எனவும் பத்திரிகைமூலமாக ப்ரசாரம் செய்துவருகிருர். இவைகளுக்கு வேதசாஸ்திரங்களில் ப்ரமாணமில்லை எனத்துணிந்து வேதசாஸ்திர வித்பன்னர்களின் கண்ணில் மண்ணைத் தூவுகிருர், ப்ரமாணங்களை எடுத்துக்

காட்டினாலோ, அத்தகைய மதத்தை யான் நம்பமாட்டேன். அதை விட்டும் விடுவேன், என பர்த்தாவினிடம் கோபங்கொண்ட மனைவி, கிணற்றில் விழுந்துவிடுவேன், எனப் பாசாங்கு செய்வது போல், பூச்சி காட்டுகிறார். உடனே ஆர்யமத தேவதை வந்து, வேண்டாம்! வேண்டாம்! என இவரை வேண்டுவாரென எதிர்பார்க்கிறார்போலும். ஆளைச் சேர்ப்பது ஆர்யமதமல்ல. எவர் சேர்ந்தாலும் அதற்குப் புதியபெருமை உண்டாவதில்லை. எவர் இதிலிருந்து சென்றாலும் சிறுமை வருவதில்லை. சீர்திருத்தக்காரரைப்போல் அடியோடு செல்லாமல் தன்னை வர்ணாச்ரமி எனக் கூறிக்கொள்வதுதான் விந்தையிலும் விந்தையாயிருக்கிறது.

அவர் அரசியிற் றுறையில் செல்லாது, மதவிஷயத்தில், காலவசத்தால் அச்ரத்தைகொண்ட, ஜனங்களை விபரீதவழியில் அழைத்துச்செல்வது, மிக துரதிருஷ்டமாகும்.

ராஜீய ப்ராமணர்களைத்தான் தாக்குகிறோமெனக் கூறிவந்த சில அப்பிராமணர்கள், பிராமணீயமெனக்கூறி வைதிக கர்மாக்களையும், வைதிகர்களையும், வைதிக க்ரந்தங்களையும், பீடித்துவருகின்றனர். நாளுக்குநாள் விஷம்போல், த்வேஷம் வலுத்து நகரங்களில் நிரபராதியாகச் செல்லும், எந்த ப்ராமணனும், ஒன்றுமறியாத சோமாரிகளிடம்கூட நிந்தாவாக்யங்களைப் பெறாமல் போகமுடிவதில்லை. ஆதலால் வேதசாஸ்திர விரோதமில்லாமல், தாழ்ந்தவர்களைத் தூக்கிவிடவும் கதரை விருத்திசெய்யவும், தமிழ்நாட்டில் உபன்யஸிக்கும்படியும், வீணாக வேதசாஸ்திர நிந்தையைத் தான் செய்யாமலும், தனது பரிவாரங்கள் செய்யாமலிருக்கும்படியும், எச்சரித்து ஓர் நீண்ட கடிதம் ஆங்கிலத்திலும் வடமொழியிலுமெழுதினேன். நாளதுவரை அதற்கு பதிலளிக்காததோடு, பழையபடியே ஆர்யமாணவர்களிடம் விதவாவிவாஹத்தைப்பற்றிக் கூறத் தொடங்கிவிட்டார். உண்மையாக, வேதசாஸ்திர விசாரம் தான் செய்யாத ஒருவர், பொதுஜனங்களால் ஏற்றிவைக்கப்பட்ட, மாஹாத்மியத்தை மதித்து தனது இஷ்டம்போல் பேசுவது அழகல்ல.

பொதுஜன ஸஹாயமிருக்கிறதென்றெண்ணினால் கதர் விஷயத்தில் கண்டபடி தனது நம்பிக்கையை மாற்றிக்கொள்ளும்படி நேரும். படித்த சிலரது கொள்கையைவிட படிக்காத பலர் வாக்கிற்கு மதிப்புக் கொடுப்பது தற்கால வழக்கமாகிவிட்டது.

கள்ளிச்செடி, கண்டவிடத்தில் சாகோபசாகையாக வளரும். சந்தனமரம், மிக அபூர்வமே. "ஊரோடு" என்றபடி, கும்பல் குவிந்து, சிலர்சொல்வதைத்திரும்பக் கூறுகின்றனரே யல்லாது தனித்துக் கூப்பிட்டு 'நீ விதவையை மணர்ந்துகொள்; நீ சேரிக்குச் செல்; நீ சிராத்தம் செய்யாதே' என சொல்வாரானுல், எத்தினைபேர் இவர் மஹாத்மா எனவும். எத்தினைபேர் இவர் துராத்மா எனவும் கூறுவர், என எளிதில் அறியலாம். விருப்பு வெருப்பில்லாதவராயிருத்தலால் ஒருஸமயம் அவரைப்பற்றியமட்டில், அவை பொருந்தலாம். பொதுமக்களின், புத்தியை, தர்மஸேதுவை, பேதிப்பது இவர்போன்றவருக்கு, அழகல்ல. மற்றுமோராண்டு ஏகாந்தமாகச் சென்று, ஆர்யமத க்ரந்தங்களே, அலசிப் படித்துவருவாரானுல், தான் செய்த குற்றத்தை உணர்வர். பல மாதக்கணக்காக உண்ணுவிருத ப்ராயச்சித்தம் செய்துக்கொள்வார் என்பது திண்ணம்.

பிறகு கீழ்கண்ட தீர்மானங்கள் பல பண்டிதர்களால் பேசி ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டன.

(1) ஸ்ரீமான் காந்தி இச்சபையார் எழுதிய கடிதத்திற்குத் தக்க பதில் எழுதாததோடு ஏற்கனவே ப்ரும்மத்வேஷமும் மத தூஷணையும் நிறைந்த தமிழ்நாட்டில் தீண்டாமையகற்றல், ஜாதியொழித்தல், விதவாவிவாகம், சிராத்தத்தை விடல் முதலிய துராசாரங்களே சாஸ்திர ஸம்மதமெனக்கூறுவதை இச்சபை மிக அழுத்தமாகக் கண்டிப்பதோடு இனி இங்ஙனம் பேசாதிருக்கும்படி அறிவிக்கிறது.

(2) இதேபோல் இன்னமும் பேசி ஆஸ்திகாது உள்ளத்தை புண்படுத்திவந்தால், ஆஸ்திக மஹாஜநங்கள் ஒன்றுகூடி பல கையெழுத்திட்டுதங்களது கொள்கையை அறிவித்து அவரது இயக்கத்திலிருந்து விலகி, ஆசார விஷயத்தில் எவரும் குறுக்கிடாதபடி ஓர் சட்டமியற்ற அரசாங்கத்தைத் தூண்டவேண்டுகிறது.

(3) ஓர் விதத்தில் மதிப்பு வைத்து வைதிகர் எதிர்க்காமலிருப்பதால், தனது கொள்கையை, எல்லோரும் ஏற்கின்றனர், என அவர் நினைப்பதால், உடனே அந்தந்த ஊரிலும் ஆஸ்திகர்களிதைக் கண்டித்து அவருக்கு அறிவிக்கவேண்டும்.

(4) மேயோ என்ற அமரிக்கப்பெண் ஹிந்துமாதர்கள் கற்பைப் பழித்து நூல் வெளியிட்டிருப்பதைக் கண்டிப்பதோடு

இந்திய கவர்மெண்டார் அவள்மேல் வழக்குத்தொடரும்படி வேண்டுகிறது.

அக்ராஸனர் முடிவுரையாக இத் தீர்மானங்களை அவரவருக்கும் அநுப்புவதாகவும் நமது தலைவரென்போர் தாறுமாருகப் பேசுவதாலும் மேனாட்டுப் பழக்கத்தைக் கைப்பற்றியதாலும் பலர் நம்மை நகைக்கின்றனர். தனக்குப் புத்ரவரன் வேண்டுமென ஓர் பெண் ஸ்ரீ காந்தியிடம் கேட்கும்படியான அளவு அறியாமை பொதுமக்களிடமிருந்து அகலவேண்டும். பண்டிதர்கள் வருவாயை எதிர்பாராமல் ஆங்காங்கு மதப்ராசாரம் செய்யவேண்டும். அவர்களுக்கு வண்டிச்சத்தமும் ஆஹார ஸௌகர்யமும் நகரங்களிலுள்ளோர் செய்துகொடுத்து கூட்டம் கூட்டவேண்டும் எனவும் உருக்கமாகப் பேசினார். வந்தனோபசாரத்துடன் ஸபை கலைந்தது.

தி ராமனுஜ தீக்ஷிதன்.
உபகார்யதரிசி.

ஓர் விக்ஞாபநம்.

சென்ற ஆவணிமீ 28உ செவ்வாய்க்கிழமை மாலை 7-மணி சுமாருக்கு வானத்தில் ஓர் அதிசயமான ஜ்யோதிஸ் தென்பட்டது சுக்லபக்ஷத்து த்விதீயையில் சந்திரன் மாலையில் எவ்வளவு தூரம் மேற்கில் உதயமாகுமோ அவ்வளவு தூரம் மேற்கு திசையில் இருக்கலாம். 3 அடி நீளத்தில் மறையுந்தன்மையில்லாத மின்னல் கொடிபோல் இருந்தது. சுமார் 3 நிமிஷநேரம் பிரகாசித்து இருந்தது. என்னுடன் நாலைந்துபேர்களும் கவனித்தார்கள். ஒருவர் அதை வால்நக்ஷத்திரமென்று குறிப்பிட்டனர். பிறகு மேகத்தால் மறைக்கப்பட்டுவிட்டது. மறுதினம் நான் அதைக் கவனிக்கவில்லை. மூன்றும் தினத்திலிருந்து கவனித்துவர அது தெரியவில்லை.

இதைப் பெரும்பாலோர் ப்ரமமென்றுதான் நினைப்பார்கள். ஆனாலும் இதைக் கண்ணுறும் பண்டிதர்கள் நிஜமென்றே எண்ணுவார்கள் என்று நினைக்கிறேன்.

இதின் விவரந் தெரிந்த அறிஞர்கள் அது இன்னதென்றும் எதனால் பின்பு தென்படவில்லையென்றும் இதினால் உலகத்திற்கு ஏதாவது நன்மைதீமை ஏற்படுமாவென்றும் அப்படி ஏற்பட்டால்

எவ்விதமேற்படுமென்கிற இதுமாதிரிகளான ஸகல விவரங்களையும் எல்லா ஜனங்களும் அறியுமாறு ஆர்யதர்மமூலமாகவே வெளியாக்கவேணுமாய்க் கோருகிறேன். ந. ஜானகிராமய்யர்,

முடிகொண்டான்.

மதமும், மானிடவாழ்க்கையும்.

19—8—27 மித்திரனில் இப்பெயர்கொண்டு ஓர் வ்யாஸம் காணப்படுகிறது. இதில் ஸ்ரீமான் டி. ரங்காசார்யாரின் பிரஸங்கம் சென்னை பிரஸிடென்ஸி கலாசாலை ஸம்ஸ்கிருத சங்கத்தின் இவ்வருடத்திய ஆரம்பப்பிரஸங்கமாம். மஹாமஹோபாத்யாய குப்புஸாமி சாஸ்திரியார் அக்கிராஸனம் வகித்தனராம், இப் பிரஸங்கத்தில் ஸ்ரீமான் ஆசாரியர் மதமும் மனிதவாழ்க்கையும் என்று ஆரம்பித்தார். தான் அன்யநாடுகளுக்குச் சென்று சுற்றிப்பார்த்ததில் நம் தேசத்தையும் அந்நாடுகளையும் சீர்தூக்கிப் பார்த்தனராம். அவ்விதம் நீங்களும் ஆராய்ச்சி செய்யவேண்டுமென்று ஸபையோர்களுக்கு உபதேசம் செய்கிறார். அவ்விதம் ஆசாரியர் சீர்தூக்கிப் பார்த்ததில் இந்நாட்டில் ஸ்திரீ புருஷர்கள் எவ்வளவு சுறுசுறுப்பாக இருக்கவேண்டுமோ அவ்வளவு சுறுசுறுப்பாகஇருக்கவில்லையாம். ஆசார்யர் அன்னியதேசம்போனதில் நம்தேசத்தில் இந்த ஒரு ரகஸ்யத்தைத்தெரிந்துகொண்டார். மேலும் அவர் கூறுவதாவது இதற்கு நமது தேசத்தின் தற்கால நிலமை காரணமா. அல்லது நமது வாழ்க்கை முறை காரணமா, அல்லது நமது மதம் காரணமா என்று கவனிக்கவேண்டுமென்கிறார். அன்யதேசம்போய் அங்கு ஆகாரவ்யவகாரஸகவாஸங்களால் ஆசார்யர் இவ்விஷயத்தில் அடைந்த புத்தி ஸாமர்த்யத்தை அடுத்து வெளியிடுவதை கவனியுங்கள். லௌகிகவாழ்க்கையிலும் சரி. பாரமார்த்திகவழியிலும் சரி. அவ்வப்பொழுது நாம் என்னிலையிலிருக்கிறோமென்பதை கவனிக்கவேண்டும். ஒரு மதம் சிறந்ததென்றால் அது உண்மையானதாகவும் சரியானவழிகாட்டுவதாகவும் இருக்கவேண்டும். வாழ்க்கை எனபது அவரவர்களிஷ்டப்படி எப்படிவேண்டுமானாலும் நடத்தப்படலாம். ஆஸ்டிரேலியா வாஸிகள் மிகவும்ஸந்தோஷமாகவும்உல்லாஸமாகவும்வாழ்க்கையை நடத்துகின்றனர், இருந்தாலும்தங்கள் கடமைகளை அவர்கள்செய்

யத்தவறுவதில்லை. இந்தியாவில் இப்பொழுது அர்த்தமில்லாமலும் பொருந்தாமலும் மதச்சடங்குகள் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. மதத்திற்கு அடிப்படையான தத்துவங்கள் என்னவென்பதை ஆராய்ச்சிசெய்யவேண்டும் சத்தியம், ஒழுக்கம், தைர்யம் இவைதான் மதத்திற்கு அடிப்படையான விஷயங்கள் மற்றப்படி சந்தர்ப்பத்திற்கொவ்வாத ஆசாரங்களை வைத்துக்கொண்டிருக்கும் மதம் சிறிதும் பிரயோஜனப்படமாட்டாது. இப்பொழுது உலகிலுள்ள அனுபவங்களை நாம் முழுவதிலும் பெறவேண்டும். மேனுட்களைப் போல் இங்கும் கூட்டமாகக் கடவுள் வழிபாடு செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன் என்று தமது அரியபிரஸங்கத்தை முடித்துவிட்டார். இனி இதில் ஒவ்வொன்றையும் கவனிப்பாம்.

முதலில் ஸ்ரீமான் ரங்காசார்யாரவர்கள் கௌரவம் வாய்ந்த மனிதர். ஆதல்பற்றியே ஆஸ்டிரேலியா முதலியவிடங்களுக்கு நம் இந்தியாவின் க்ஷேமலாபத்தின்பொருட்டு பிரதிநிதியாய் அனுப்பப்பட்டிருந்தனர். இவர்கள் நாமும் நம் இந்தியாவும் எவ்விதம் முன்னேற வழியிருக்கிறதென்பதையே சிந்தித்துப் போனபடியால் ஆங்காங்கிருக்கும் மனிதர்களுடையவும் தேசத்தினுடையவும் மதத்தினுடையவும் பரமநுட்பங்களை நுண்ணிய அறிவால் அறிந்து வந்திருக்கிறார்கள். அவ்விதம் அறிந்து கப்பலை விட்டிறங்கியதும் ஸம்ஸ்கிருத ஸபையின் வாயிலிலேயே கொண்டுவந்த கப்பல சறக்கைச் சிந்திவிட்டனர். இவ்விஷயத்தில் நான் தலையிடுவதே நியாயமில்லையாயினும் ஸம்ஸ்கிருத ஸபை என்ற பெயரைப் பார்த்ததால் நமக்குப் பாததியமுண்டென்றிறங்கினேன். ஆகையால் மன்னிக்கவும்.

முதலில் ஸம்ஸ்கிருத ஸபையின் அபிமானிகள் கௌரவம் வாய்ந்த நபர் என்றுமட்டிலும் எண்ணிக்கொண்டு இவர்களது உபன்யாஸத்தைச் செய்யக்கேட்டுக்கொண்டிருப்பார்களேயொழிய அன்னியநாட்டுக் கப்பல் சறக்குக்கொண்டுவந்திருக்கிறார்கள் என்று தெரிந்துகொள்ளவே இல்லை. ஆதல்பற்றியே அச்சமயம் அக்கிராஸனம் வஹித்த ஸ்ரீமான் மஹாமஹோபாத்தியாய குப்புஸாமி சாஸ்திரிகளவர்களே இந்த உபன்யாஸம் மாணவர்கட்குப் பொருத்தமுடையதல்லவென்றே உதறிவிட்டார்கள்.

(தொடரும்)

M. N. சுப்ரமணியசாஸ்திரிகள்.